
# மலர்வனம்

MALARVANAM மின் இதழ்

மலர் 4 இதழ் 4 தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் ஏப்ரல் 2024

மலர்வனம் சாதனை
மகளிர் விருதுகள்
&
சித்திரை சிறப்பிதழ்



அன்பு வாசகர்களுக்கு,

அனைவருக்கும் தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

இம்மாத மலர்வனம் மன்னிதழ் மலர்வனம் சாதனை மகளிர் விருதுகள் & சித்திரை சிறப்பிதழாக மலர்கிறது. ஆகவே, மேலும் சிறுகதைகள், கவிதைகள், மற்ற பகுதிகள் மே இதழில் வெளியாகும்.

சந்தா (ரூ.500, பாட்டும் பரதமும் ரூ.600), விளம்பரங்கள், நன்கொடைகள் அளித்தால் மேலும் இந்த மின்னிதழை மேம்படுத்த உதவியாக இருக்கும். தொடர்ந்து ஆதரவு தர வேண்டுகிறோம். நன்றி.

ராம்கி,<br>
ஆசிரியர்<br>
ஜிபே: 9884694708

---

**மலர்வனம்**
மின் இதழ்

மலர்: 4 இதழ்: 4

**ஆசிரியர்:**

**ராம்கி**

இணை ஆசிரியர்:

**சீதா ராம்கி**

தயாரிப்பில் உதவி:
தேவா

வடிவமைப்பு:
N. செந்தில் குமார்
N. கிருஷ்ண குமார்
Sudar Design &
Publishing House
கைபேசி: 9283178116

விலாசம்:
ஆசிரியர், மலர்வனம்
13, அம்பேத்கார் தெரு,
ரம்யா நகர்,
போரூர், மதனந்தபுரம்,
சென்னை 600 125.

கைபேசி: 9884694708
wadalaramki@yahoo.co.in

---

இந்த இதழில் வெளிப்படுத்தப்பட்ட அனைத்து கருத்துக்களும் அந்த அந்த எழுத்தாளர்களுடையது.

நேரடி வர்ணனை

# மலர்வனம் சாதனை மகளிர் விருதுகள் விழா



மலர்வனம் மின்னிதழின் சாதனை மகளிர் விருதுகள் வழங்கும் விழா 2024 மைலாப்பூர் பாரதீய வித்யா பவனில் 10.3.2024 மாலை சிறப்பாக நடைபெற்றது. விருதாளிகள் அனைவரும் சேர்ந்து குரூப் போட்டோவை முதலிலேயே எடுத்துக் கொண்டார்கள்.



அனைவரையும் வருக வருகவென வரவேற்ற தொகுப்பாளினி திருமதி உமா பிரேம்குமார் அவர்கள், ஸ்ரீனிவாசராவ் (நிறுவனர், ஸ்ரீனிவாஸ் வுட்ஒர்க்ஸ், முகலிவாக்கம்) தயாரித்த ஒரு சிலையை திறந்து வைக்க சிறப்பு விருந்தினர்களான டாக்டர் ஷ்ருதி ப்ரஷாந்த், திருமதி லதா சரவணன் மற்றும் திருமதி நாராயணி சங்கமித்ரன் அவர்களை அழைத்தார். டாக்டர் ஷ்ருதி தங்கத்தில் செய்தாற்போல் மின்னும் தாய் ஒரு குழந்தைக்கு பாலூட்டும் மரச்சிற்பத்தைக் கண்டு ரசித்து, வெகுவாக பாராட்டினார். மேடையின் முன்னே இச்சிலை கம்பீரமாக வைக்கப்பட்டது.



சிறப்பு விருந்தினர்கள் மூவரையும் மேடைக்கு அழைக்கப்பட்டதும், திருமதி லட்சுமி சரவணன் அவர்கள் கடவுள் வாழ்த்து பாட, நிகழ்ச்சி இனிதே துவங்கியது. அவருக்கு திருமதி கீதாஞ்சலி ராஜகுமார் பொன்னாடை அணிவிக்க, டாக்டர் ஷ்ருதி பிரஷாந்த் மலர்வனம் சார்பாக நினைவுப் பரிசு வழங்கினார்.

## மூன்று சிறப்பு விருந்திர்கள் அறிமுகம்



**டாக்டர் ஷ்ருதி பிரஷாந்த்.....**

இவர் ஸ்ரீ ராமசந்திரா இன்ஸ்டியூட் ஆப் ஹையர் எடுகேஷன் மற்றும் ரிசெர்ச்சில் மகப்பேறியல் மற்றும் மகப்பேறு மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறார். ராமசந்திரா மருத்துவ கல்லூரியில் எம்பிபிஎஸ் பயின்ற முன்னாள் மாணவி ஆவார். மேலும் எம்எஸ் பட்டமும் பெற்றவர். தான் படித்த மருத்துவ கல்லூரி சார்ந்த நிறுவனத்தில் பணிசெய்து வரும் இவர், மிகவும் சிக்கலான மகப்பேறியல் மற்றும் மகப்பேறு பிரச்சனைகளை கையால்வதில் திறமைசாலி. அதுமட்டுமல்ல, மினிமலி இன்வேசிவ் என்டோஸ்கோபி கைனகாலஜி அறுவைசிகிச்சையை லேப்ரோஸ்கோபி மூலமாக விட்ரெக்டமி, ஓவரெக்டமி போன்றவற்றிலும் நல்ல அனுபவமிக்கவர். தற்போது அந்த மருத்துவமனையில் உள்ள இலவச மகப்பேறு வார்டின் தலைமை பொருப்பாளராக தாய் சேய்களை காப்பாற்றி, சிகிச்சை அளித்து வருவது பெருமைக்குரியது. இவருக்கு திருமதி கீதா நாராயணசுவாமி பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.



### திருமதி லதா சரவணன்...

பிரபல எழுத்தாளரான இவர், வணிகவியல் படிப்பை முடித்து வடசென்னையில் ஸ்ரீ சாந்தி சாரிஸ் நிறுவனத்தை கணவருடன் இணைந்து நடத்தி வருகிறார். மின்கைத்தடி என்னும் இணைய இதழினை நடத்தி வருகிறார். பிம்பம் பதிப்பகத்தின் மூலம் புத்தகங்கள் வெளியிட்டு பதிப்பாளர் பணியிலும் இயங்கி வருகிறார். இதுவரையில் இவரின் 68 நாவல்களும், 230க்கும் மேற்பட்ட சிறுகதைகளும், கட்டுரைகளும், வெகுஜனப் பத்திரிக்கைகளில் வெளிவந்து இருக்கிறது. திருநங்கைகள் வாழ்வியல் குறித்து காகிதப்பூக்கள் மற்றும் சித்திரப்பாவைகள் என்று இரண்டு நூல்கள் எழுதியுள்ளார். திருக்குறள் விளக்கக் கதைகள், நக்கீரன் இணையத்தில் சைக்கோ த்ரில்லர் அந்த மைக்ரோ நொடிகள் மற்றும் பெண்களில் வாழ்வியல் கதைகளான இப்படியும் இவர்கள் தொடராக வெளிவந்தது. உயிர்மையில் க்ரைம் த்ரில்லர் தொடர் வெளிவந்து உள்ளது. இவர் சிறந்த கவிதையாசிரியர் விருது, தங்கமங்கை விருது, ஆற்றல் அரசி, சிறந்த எழுத்தாளர் விருது என பட்டியல் நீள்கிறது. இவருக்கு திருமதி புவனா மணிகண்டன் பொன்னாடை அணிவித்தார்.



### திருமதி நாராயணி சங்கமித்ரன்...

தன் கணவருடன் இணைந்து வைகறை புட்ஸ் பிரைவேட் லிமிடெட்டை திறம்பட நடத்திவருகிறார். இந்நிறுவனம் மலர்வனத்துடன் இணந்து சாதனையாளர்களை கௌரவித்தது. அவருக்கு மலர்வனம் இணை ஆசிரியர் திருமதி சீதாலட்சுமி நன்றி தெரிவித்து பொன்னாடை அணிவித்தார்.

இதைத் தொடர்ந்து மலர்வனம் சாதனை மகளிர் விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்ச்சி இனிதே துவங்கியது. உமா பிரேம்குமார் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை ஒருவர் பின் ஒருவராக அறிமுகப்படுத்த, சிறப்பு விருந்தினர்கள் மூவரும் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, விருது மற்றும் சான்றிதழ் அளித்து கௌரவித்தார்கள். முதலாவதாக.....

மலர்வனம் சிறந்த பட்டையக் கணக்காளர் & வரி ஆலோசகர் விருது

திவ்யா அபிஷேக்



திவ்யா அபிஷேக் Bcom, MBA, LLB, FCA. ACMA, ACS, Diploma in IFR (ACCA), Audit (CIOT UK) என இவரது படிப்பு பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. Govt. Accounting, MSME Audit, Corporate law, Corporate finance and audit, taxation & startup consultancy போன்ற பல துறைகளில் வல்லுனர்.

இளம் வயதிலேயே CMA பட்டம் பெற்று சாதனைபடைத்தவர். SIRC ICA of Indiaவின் தலைவியாகவும் பதவி வகித்துவருகிறார். பல நிறுவனங்கள் மற்றும் டிரஸ்ட்களில் இயக்குனராகவும் உள்ளார். சிறந்த பேச்சாளரான இவர் 1,050 நிகழ்ச்சிகளிலும், மாநாடுகளிலும் பங்கு கொண்டுள்ளார். Social Stock Exchange என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். இவர் சுதந்திர போராட்ட வீரரின் குடும்பத்தை சேர்ந்தவர் என்ற பெருமை பெற்றவர். (பலத்த கைத்தட்டல்)

ஏராளமான விருதுகளை பெற்ற இவர் அண்மையில் SAFA's Women Star of the Year Award in South Asia விருதை பெற்று வந்துள்ளார்.

மலர்வனம் சிறந்த Ai ஆராய்ச்சியாளர் விருது
காம்கேர் கே. புவனேஸ்வரி




காம்கேர் கே. புவனேஸ்வரி, காம்கேர் சாஃப்ட்வேர் என்ற ஐ.டி. நிறுவனத்தின் CEO, Ai ஆராய்ச்சியாளர், தொழில்நுட்ப வல்லுநர், கிரியேடிவ் டைரக்டர், எழுத்தாளர், பதிப்பாளர், பேச்சாளர், சமூக ஆர்வலர் என பன்முக சாதனையாளர். இந்த ஆண்டு புத்தகக் கண்காட்சியில் இவர் அசத்தும் Ai - Part1 , அசத்தும் Ai - Part2 (இனி எல்லாம் மெட்டாவெர்ஸ்) என்ற இரண்டு நூல்களை வெளியிட்டு சாதனை புரிந்துள்ளார். இதில் ஒவ்வொரு அத்தியாயத்தின் தொடக்கத்திலும் ஒரு Ai அவதார் கண் முன் தோன்றி அத்தியாயச் சுருக்கத்தை விவரிக்கும். இது புதுமையும், சாதனையும் தானே! இவரது வியத்தகு தொழில்நுட்ப அறிவாற்றலும், உழைப்பும் பாராட்டப்பட வேண்டியது. இதுவரை 250 நூல்களுக்கும் மேல் எழுதியுள்ளார். பல்வேறு துறைகளுக்கான Ai தயாரிப்புகளையும், Ai வசதிகளையும் உருவாக்கித்தரும் மாபெரும் தொழில்நுட்ப சாதனையை தன் நிறுவனத்தின் மூலம் செய்து வருகிறார். இவர் பெற்ற விருதுகள் ஏராளம். தன் நன்றியுரைக்குப்பின் மலர்வனம் ஆசிரியர் ராம்கி மற்றும் சீதாலட்சுமியின் அழகான Ai ஓவியத்தை வழங்கினார்.

---

## Three cheers

I wanted to draw special attention to few observations that I had after attending grand Malarvanam Award function. So professional.... well planned... Nice interspersing of speeches to keep the function free from monotony and boredom.Top class people being honoured. It all goes to show how much of passion drives this e magazine.Three cheers to the Malavanam team for the wonderful function.

- M RAMADAS



மலர்வனம் ரத்ன கமலம் விருது – கதக் நிருத்ய & பரத நாட்டியம்

லட்சுமி கண்ணன்

ஜதீஸ்வரலயா நடனப் பள்ளியின் கலை இயக்குனரான இவர் கடந்த 27 வருடங்களாக கதக் மற்றும் பரத நாட்டிய கலையை பாரம்பரியம் குன்றாமல் கற்றுக் கொடுத்துவருகிறார். கதக் நடனக்கலைஞர் பேராசியர் ஸ்ரீ விஜய் சங்கர் சிங் பதோரியாவின் சீடரான இவர் தீவிரமாக இக்கலையை கற்றுக் கொண்டார். வழுவூர் ஸ்ரீ ராமைய்யா பிள்ளையின் ஆசிகளுடன் அவரது மகன் வழுவூர் ஸ்ரீ சாம்ராஜ் அவர்களிடம் பரத நாட்டியக் கலையை பயின்றார். குரு காஞ்சனா ஜனார்தன்னிடம் இக்கலையை மேலும் பயின்று பல திறமைகளை வளர்த்துக் கொண்டார். தாள நுணுக்கங்களை வாக்கியகர குரு டாக்டர் பி. வெங்கட சுப்ரமணியன் அவர்களிடமும், நட்டுவாங்கத்தை குரு கலைமாமணி உடுப்பி ஸ்ரீ லட்சுமி நாராயணனிடமும் கற்று சிறப்பாக கையாளக் கற்றுக் கொண்டார். சங்கீத் பிரபாகர் விருது பெற்றவர். கதக்கில் இளங்கலை பட்டம் மற்றும் பரத நடனத்தில் பட்டம் பெற்றவர்.

இவரது நன்றியுரைக்குப்பின் இசையமைப்பாளர் திரு வெங்கடசுப்ரமணியன் பேசும் போது, ஒவ்வொருவருக்கும் ஒரு தனித்திறமை நிச்சயமாக இருக்கும். அதைக் கண்டறிந்தால் வாழ்வில் வெற்றி பெறலாம், அதற்கு நானே உதாரணம் என்ற போது பலத்த தைத்தட்டல். அவருக்கு காம்கேர் கே. புவனேஸ்வரியின் தந்தையும், பி.எஸ்.என்.எல். நிறுவனத்தில் SDEயாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. வி. கிருஷ்ணமூர்த்தி மலர்வனம் சார்பாக பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.





மலர்வனம் தமிழ்ச் சுடர் விருது
முனைவர் அ. சுகந்தி அன்னத்தாய்

சென்னை ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரியில் 12 ஆண்டுகளாக உதவிப் பேராசிரியர் பணி. மாணவர் பருவத்திலேயே கருத்தரங்குகளிலும், பட்டிமன்றங்களிலும் மேடை ஏறிய இவர் கல்லூரி கவிதை போட்டிகளில் பரிசு பெற்றவர். 2000ஆம் ஆண்டு – தினகரன் நாளிதழ் வெளியிட்ட, சாராள் தக்கர் கல்லூரி கடலின் நன்முத்துகள் வரிசையில் இடம்பெற்றவர். மேலும் வானொலி உரை திருநெல்வேலி அகில இந்திய வானொலியில் இவரது பங்களிப்பு பாராட்டப்பட்டது. 20க்கும் மேற்பட்ட பன்னாட்டுக் கருத்தரங்குகளில் தனது கட்டுரைகளை வழங்கியுள்ளார். பல்வேறு ஆய்விதழ்களில் இவரது ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்துள்ளது. ஏராளமான கவியரங்குகளில் கலந்து கொண்டு கவிதை அளித்து விருதுகளைப் பெற்றவர். இணைய வழியிலும், பல கல்லூரி உரையரங்குகளிலும் சொற்பொழியாற்றியவர். அசிஸ்ட் உலக சாதனை நிறுவனம் நடத்திய 2600 மணிநேர பன்னாட்டுத் தொடர் வலையரங்கு சங்கமத்தில் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினராகச் செயல்பட்டு, அநேக நிகழ்வுகளை முன்னெடுத்துச் சென்றவர். ஐந்து நூல்கள் படைத்துள்ளதோடு, நாட்டுப்புறச் சிறார் வழக்காறுகள் எனும் இவருடைய நூல் நெல்லை மனோன்மணியம் பல்கலைக்கழகத்தில் பாடத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளது. மேலும், தான் எழுதிய சாதனை மகளிர் பற்றிய கவிதையை வாசிக்க பலத்த கைத்தட்டல்.



## மலர்வனம் சிறந்த அன்னை விருது

### சி. வித்யாலட்சுமி

சமையல்கலை, ஆன்மிகம், கோலம், கைவேலைப்பாடுகள் மற்றும் கொலு வைப்பத்தில் ஆர்வமிக்க இவர் இதற்காக பெற்ற பரிசுகள் ஏராளம். ஒவ்வொரு வருடமும் ஒரு தலைப்பில் வித்யாசமாக கொலு வைப்பவர். சிறு வயது முதலே பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக வரவேண்டும் என்பதே இவரது லட்சியம். தன் மூன்று பெண்களையும் நன்றாக படிக்க வைத்து இன்று மூவரும் டிசிஎஸ்சில் இன்ஜினீயர், பிடபுள்யூடியில் உதவி இன்ஜினீயர் மற்றும் அரசு மருத்துவராக்கியுள்ளார். இவரது பெண்கள் மூவருமே தங்க பதக்கம் வென்றவர்கள். தன் கணவரின் ஒத்துழைப்புடன் தன் மூன்று பெண்களையும் வளர்த்து, நல்ல நிலையில் உயர்த்தி இருப்பதே பெரிய சாதனை என்கிறார் இவர். இவருக்கு கனகாம்புஜம் அவர்களின் நினைவாக மலர்வனம் சிறந்த அன்னை விருது வழங்கி பாராட்டியது. மேலும், அவரது கணவரின் 70வது பிறந்தநாளுக்காக மேடை ஏற்றி, வெ. தயாளன் அவர்கள் அவருக்கு பொன்னடை அணிவித்து தம்பதிகளை வாழ்த்தினார்.





மலர்வனம் ரத்ன கமலம் விருது – பரத நாட்டியம்

அகிலா சத்தியநாராயணன்

கலைமாமணி பி.கே. பக்கிரிசாமி பிள்ளை மற்றும் நடராஜ் சகுந்தலாவின் சீடர். தஞ்சாவூர் பாணியில் பரதக்கலையை இந்தியா மட்டுமின்றி அமெரிக்கா, மற்றும் ஐரோப்பாவிலும் கடந்த 40 வருடங்களாக வளர்த்துவருகிறார். தன் அன்னை ரங்கநாயகியிடம் முதன் முதலில் நடனத்தை கற்றுக் கொண்டார். 1978ல் ஆர் ஆர் மால்னி ஆர்ட்ஸை துவக்கி, ஏராளமான நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்திவருகிறார். 3000 சலங்கைபூஜைகள் மற்றும் 388 அரங்கேற்றங்களை நடத்தியவர். முதியவர்களுக்கும், மனநலம் குன்றிவர்களுக்கும் இந்த நாட்டிய கலையை கற்றுக் கொடுத்துவருகிறார். அமெரிக்காவில் இவரது மகளும் நடனபள்ளியை நடத்திவருகிறார். தன் மகளுடன் இணைந்து ஆர்ட் அண்டு அனாடமி என்ற தலைப்பில் ஒரு ஒர்க் அவுட் பயிற்சியை லாரன்ஸ் பல்கலைக் கழகத்தில் துவக்கியவர். பல நாட்டிய நாடகங்களுக்கு நடன வடிவமைப்பு செய்துள்ளார். கௌரவ டாக்டர் பட்டம், வாழ்நாள் சாதனையாளர் விருது, நாட்டிய சுடாமணி என விருது பட்டியல் நீள்கிறது. இவர் மேடையில் மலர்வனம் ஆசிரியருக்கும், இணை ஆசிரியருக்கும் பொன்னடை அணிவித்து மகிழ்ந்தார்.






மலர்வனம் சிறந்த வளரும் தொழிலதிபர் விருது

அக்ஷயா கிருஷ்ணகுமார்

அக்ஷயா அதிக சம்பளம் தரும் கார்ப்ரேட் நிறுவன வேலையை விட்டு, சொந்தமாக தொழில் செய்ய வேண்டும் என்ற லட்சியத்தோடு HAPPY PIQUE என்ற நிறுவனத்தை துவக்கினார். பல வணிக நுட்பங்களை தானாகவே கற்று, முழு முயற்சியோடு முன்னேறி இன்று HAPPY PIQUE என்பது ஒரு பிரபல BRAND NAME என பெயர் பெற்றுள்ளது. தனது கணவர், பெற்றோர்கள் மற்றும் சகோதரியும் முழு ஈடுபாடுடன் இவருக்கு உதவுவது தான் செய்த புண்ணியம் என்கிறார். தன் குடும்பத்தாரின் ஒத்துழைப்புடன் அனைத்து பெண்களையும் கவரக்கூடிய அழகிய artificial jewelleries. return gifts and accessories போன்றவற்றை ஆன்லைன் மூலமாக விற்பனை செய்து வருகிறார். இவருக்கு கை வேலைப்பாட்டில் ஆர்வம் இருப்பதால் வாடிக்கையாளர்களின் மன விருப்பத்தை கண்டறியும் திறமையே இவரின் வெற்றிக்கு முக்கிய காரணம். இவர் புகைப்படங்கள் எடுப்பதிலும் ஆர்வமிக்கவர்.





மலர்வனம் சாதனை நட்சத்திரம் விருது
பகவதி மணிகண்டன்

ஜிடிஏ வித்யா மந்திர் பள்ளியில் பத்தாம் வகுப்பிலும் 12ம் வகுப்பிலும் அதிக மதிப்பெண்கள் பெற்ற இவர், படிப்பிலும் மட்டும் சுட்டி அல்ல. கராத்தே தற்காப்பு கலையில் பிளேக் பெல்ட் பெற்றவர். பரதநாட்டிய கலையை கற்று சலங்கை பூஜையில் ஆடி பாராட்டு பெற்றவர். இந்தி மொழியை கற்று தக்ஷின் பாரத் இந்தி பிரசார் சபா மூலம் பிரவீன் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர். பாடுவதிலும் ஆர்வம் உடையவர். அண்மையில் நடந்த சிஏ பவுண்டேஷன் தேர்வில் அகில இந்திய அளவில் அதிக மதிப்பெண்கள் 400க்கு 372 பெற்று முதல் இடத்தில் தேர்வாகியுள்ளார். சிஏவில் தேர்சி பெற்று Indian Foreign Service (IFS) நாட்டுக்கு சேவை செய்தே இவரது லட்சியம். இவரது லட்சியத்தை எட்ட மலர்வனம் இவரை வாழ்த்துகிறது.

## கௌரவப்படுத்தியதே ஒரு சாதனை!

உலக மகளிர் விழாவை, 10/03/2024 அன்று, மலர்வனம் மின்னிதழ் வித்தியாசமாக, பல்வேறு துறைகளில், சாதனை படைத்த, படைத்துக் கொண்டிருக்கும் மகளிர் 17 பேருக்கு விருது, சான்றிதழ் அளித்து கௌரவப்படுத்தியதே ஒரு சாதனைச் செயலாகும்.

ஆசிரியர் ராம்கி மற்றும் அவர்களைப் பாராட்டிப் பேசிய தமிழறிஞர்களுக்கும், உதவிய நல்ல உள்ளங்களைக்கும் மிக்க நன்றி!

– ஆர். கீதாஞ்சலி




## மலர்வனம் இசைச்சேவை திலகம் விருது
டாக்டர். ஜி. ராஜலட்சுமி

இசைக் குடும்பத்தில் பிறந்த டாக்டர் ராஜலட்சுமி வீணை வாசிப்பதில் தனி ஆர்வத்துடன் வளர்ந்தார். இவர் எம்ஏ (வீணை) இல் முதுகலை பட்டதாரி மற்றும் மெட்ராஸ் பல்கலைக்கழகத்தில் எம்பில் பட்டம் பெற்றார். 15 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் இசைக்கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றினார். சிங்கப்பூரில் வசிக்கும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு இசை கற்பிப்பதில் சிங்கப்பூரில் உள்ள தமிழ்ச் சங்கத்திலும் ஈடுபட்டார். பாடுவது மட்டுமின்றி ஹார்மோனியம், கீ போர்டு போன்ற பிற இசைப் பிரிவுகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர். கவிதா பாரதி வித்யாலயா என்ற இசைப் பள்ளியைத் துவக்கி ஏராளமான மாணவர்களுக்கு இசைக் கலையைக் கற்றுக் கொடுத்து வருகிறார். சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வளர்ச்சியடையாத மாணவர்களுக்கு இசையை எடுத்து பரப்பியதற்காக அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. இசை ஆர்வமுள்ள இளைஞர்களின் நலனுக்காக பூந்தமல்லியில் மற்றொரு இசைப் பள்ளியை துவக்கியுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்புக்கு இசையை பாடமாக எடுத்த மாணவர்களுக்கு வழிகாட்டி வருகிறார். அகாடமி ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸ் நடத்தும் தேர்வுகளில் தனது மாணவர்களுக்கு பங்கேற்பதற்கான வாய்ப்பை வழங்குவதற்காக லண்டனில் உள்ள அகாடமி ஆஃப் ஃபைன் ஆர்ட்ஸுடன் இணைந்து பணியாற்றியுள்ளார்.

---

## மகிழ்ந்தது மனம்

மலர்வனம் விருது பெற்று மகிழ்ந்தது மனம்...
அதில், பொங்கி வழிந்தது,
உங்கள் அன்பின் மணம்..!

– கவிஞர் குமரி அமுதன்



மலர்வனம் சிறந்த எழுத்தாளர் விருது
இராஜலட்சுமி பிரபாகரன்

குடும்பத்தின் முதல் பட்டதாரியான இவர் அகவை ஐம்பதுக்குப் பிறகு எழுதுவதில் அவருக்குள் இருந்த திறமையை கண்டு கொண்டு முழுநேர எழுத்துப் பணியை கையில் எடுத்துள்ளார். இவர் நூலாசிரியர், கவிஞர், திரைக்கதை மற்றும் வசனகர்த்தா, திரைப்பட பாடலாசிரியர், மொழியாக்க நிபுணர், உள்ளடக்க எழுத்தாளர் என்று பல்வேறு தமிழ் எழுத்துசார் தளங்களில் இயங்கி வருகிறார். இவர் எழுதிய ஒரு சரித்திர நாவல் மற்றும் ஒரு சமூக நாவல் புத்தகமாக வெளிவந்து நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இவரின் மேடை நாடகம் மின்மினி இதழில் தொடராக வெளிவந்தது. மலர்வனம், வாங்க பேசலாம், கொலுசு, ஆதிரை ஆகிய இலக்கிய இதழ்களில் இவரது கவிதைகள் பல வெளி வந்துள்ளன. உதிரிகள் இலக்கிய இதழ் நடத்திய சிறுகதை போட்டி 2023 –ல் இவரது "பேய்க்கொம்பன்" பரிசு பெற்றுள்ளது. இவருக்கு எழுத்தாளர் குட்டிபாலாவின் தாய் தர்மாம்பாள் சார்பாக, மலர்வனம் சிறந்த எழுத்தாளர் விருது அளித்து பாராட்டியது.

## எழுத்துலகில் முதல் சாதனையாளர் விருது

மனமார்ந்த நன்றிகளும் வணக்கங்களும்.. எனது எழுத்துலகில் முதல் சாதனையாளர் விருது மலர்வனம் இடமிருந்து பெறுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.. என்றென்றும் அன்புடன்!

– இராஜலட்சுமி




மலர்வனம் சிறந்த மருத்துவ சேவை ஆர்வலர் விருது

டாக்டர் ஆர். நித்யஸ்ரீ

அக்குபஞ்சர் மற்றும் எலெக்ட்ரோ ஓமியோபதிக் மெடிசின்ஸ் மருத்துவர். எளிய, வலியில்லாத மற்றும் குறைந்த செலவில் சிகிச்சை அளித்து வருகிறார். சைக்காலஜி மற்றும் மலர் மருத்துவத்திலும் நிபுணர். சிறுநீரக்கற்கள், தைராய்டு, கொளஸ்ட்ரால், டயாபெடிக்ஸ், வீஸிங், கார்டியாக் பிரச்சனைகள் போன்ற ஏராளமான நோய்களுக்கு இவர் வெற்றிகரமாக சிகிச்சை அளித்து வருகிறார். பல இடங்களிலும், நிகழ்ச்சிகளிலும் மருத்துவ முகாம்கள் மூலம் இவரது துறை சம்பந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்தி, ஏராளமானவர்களுக்கு இலவச ஆலோசனைகளையும் வழங்கி சமூக சேவையில் ஈடுபட்டுவருவது பாராட்டத்தக்கது.

மலர்வனம் சிறந்த புகைப்பட கலைஞர் விருது

காயத்ரி சுந்தரகந்தன்




இவர் ஒரு சிறந்த புகைப்பட கலைஞர். கடந்த 13 ஆண்டு காலமாக சுயமாக கற்றுக்கொண்டு இயற்கை, காட்டுயிர், கோயில் மற்றும் நடன புகைப்படங்கள் எடுத்து வருகிறார். கடந்த 9 வருடங்களாக போட்டோ கிராபிக் சொசைட்டி ஆப் மெட்ராஸ் கிளப்பில் உறுப்பினராகவும் உள்ளார். இவரது புகைப்படங்கள் பல பிரபல பத்திரிகைகள் மற்றும் மாத இதழ்களில் வெளிவந்திருக்கிறது. இவரது புகைப்படங்கள் பல போட்டோ கண்காட்சிகளில் வைக்கப்பட்டு பாராட்டு பெற்றுவருகிறது. விருது பெற்றது மட்டுமல்லாமல் அந்நிகழ்ச்சியை அழகாக தன் கேமராவால் படம்பிடித்து மலர்வனத்திற்கு வழங்கினார்.

## மலர்வனம் செவிநுகர் இசைமணி விருது

**வைஷ்ணவி ராமதாஸ்**



முதியோரின் கடைநாட்களை மகிழ்ச்சியாகவும், சிறப்பாகவும், அர்த்தமுள்ளதாகவும் மாற்ற, அவர்தம் செவித்திறனை எவ்வாறு மேம்படுத்துவது? இந்த எண்ணங்களை கருவாகக்கொண்டு ஸ்ரீ ராமச்சந்திரா பல்கலைக்கழகத்தில் தமது ஆராய்ச்சியை துவங்கியவர். இசையானது செவிவழி கேள்வித்திறன், உணர்தல் மற்றும் மீட்டெடுக்கும் திறன்களை மீண்டும் மேம் படுத்துகிறது – என்பது அவரது ஆரம்பநிலை கண்டுபிடிப்புகளில் ஊர்ஜிதம் செய்யப்பட்டு பன்னாட்டு ஆய்விதழில் பதிப்பேறி உள்ளது. இவர் ஸ்ரீ ராமச்சந்திரா பல்கலைக்கழகத்தில் பேச்சு, மொழி மற்றும் கேட்பியல் துறையில் இளங்கலைப் பட்டம் பெற்ற இவர். முதுகலை பட்டப்படிப்பை பெங்களூரில் தொடர்ந்து இரண்டிலும் தங்கப் பதக்கத்துடன் முதலிடம் பெற்று தேர்ந்தவர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் இசையில் முதுகலைப் பட்டமும் பெற்றுள்ளார். அவர் ஒரு சிறந்த கர்நாடக இசைப் பாடகர் மற்றும் பெங்களூரு அகிலஇந்திய வானொலியின் கலைஞர் ஆவார். இவருக்கு சமீபத்தில் சென்னை சுஸ்வரா டிரஸ்ட் மூலம் யுவ சங்கீத கலா ஜோதி என்ற பட்டம் வழங்கப்பட்டது, முதியவர்களுக்கு இயல்பாகவே நாளாவட்டத்தில் பாதிப்படையும் செவித்திறன், உணர்தல் மற்றும் மீட்டெடுப்பு திறன்களை மேம்படுத்துவதற்கு ஒரு ஊடகமாக இசையைப் பயன்படுத்துவதற்கான அவரது இந்த முயற்சி முதியோரின் கடை நாட்களின் தரத்தை மேம்படுத்துவதற்கான ஒரு வழித்தோன்றல் முயற்சியாக அமைந்துள்ளது. இவரது இந்த வித்யாசமான முயற்சிக்கு கேவி நாராயணனின் நினைவாக மலர்வனம் செவிநுகர் இசைமணி விருது வழங்கி கௌரவித்தது. தன் நன்றியுரையை முடிக்கும் முன் ஒரு பாடலைப்பாடினார்.

## மலர்வனம் சிறந்த பத்திரிக்கை எழுத்தாளர் விருது
### தனுஜா ஜெயராமன்



கொரானா காலகட்டத்தில் முழு நேரமாக சிறுகதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள், தொடர்கள் என பத்திரிக்கைகளில் எழுத ஆரம்பித்த இவர் கல்கியில் ஆன்லைன் செய்திப்பிரிவில் கன்டன்ட் ரைட்டராக அனுபவம் பெற்றவர். குங்குமம், தோழி , குமுதம் ஸ்நேகிதி, தினகரன் மகளிர் மலர், மின்மினி போன்ற பத்திரிக்கைக்காக பலரையும் நேர்காணல் செய்துள்ளார். அமேசான் கிண்டிலில் நகைச்சுவை' சிறுகதை தொகுப்பு வெளியிட்டுள்ளார். கல்கியில் அரசியல், சமூக, பெண்கள் முன்னேற்றம் மற்றும் சினிமா சார்ந்த செய்திகளை எழுதியுள்ளார். குமுதம் பக்தி ஸ்பெஷல், கல்கி தீபம், குங்குமம் தோழி இதழ்களில் பக்தி கட்டுரைகள் மட்டுமின்றி பல மின் இணைய இதழ்களில் எழுதி வருகிறார்.

## மலர்வனம் சிறந்த மொழிபெயர்பாளர் விருது
### ஸ்நேஹா நாராயணசுவாமி



ஸ்நேஹா திரைப்பட பின்னணிப் பாடகி மற்றும் வேற்று மொழி பெயர்பாளர். 8 ஆண்டுகளுக்கும் மேலாக கர்நாடக இசை கற்ற இவர், இசையில் நிறைய வொகேஷனல் கோர்ஸ் செய்துள்ளார். இவர் தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் மற்றும் கொரிய மொழிகளில் பாடுவதில் வல்லவர். மற்ற மொழிகளின் மீது ஆர்வமிக்க இவர், கொரிய மொழியை கற்பிக்கும் பல்கலைக்கழகத்தில் முதலிடம் பெற்றவர். தற்போது கொரிய மொழி பெயர்ப்பாளராகவும் பணிபுரிந்து வருகிறார். கொரியாவிலிருந்து சென்னைக்கு வரும் கொரிய தொழில் அதிபர்களுக்கு கொரிய மொழிப்பெயர்பாளராக பணிசெய்து வருகிறார். சென்னையில் நடைபெறும் பல கொரிய நிகழ்வுகளில் கலந்துகொண்டு, கொரிய பாடல்களைப் பாடி அசத்தி வருகிறார். அழகாக தமிழ்பாடலைப் பாடி தன் நன்றியுரையை பூர்த்தி செய்தார்.



மலர்வனம் சிறந்த உடற்கல்வி ஆர்வலர் விருது

ஜி. மஹதேஸ்வரி

மஹதேஸ்வரி கொளப்பாக்கம் போதி கேம்பஸ் பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவி. இவர் படிப்பில் மட்டும் சுட்டி அல்ல. கராத்தே, சிலம்பம், நின்ஜேங் மற்றும் களறி, யோகாவிலும் பயிற்சி பெற்றவர். இவரது பெயர் 2022ம் ஆண்டு இந்தியா புக் ஆப் ரெக்கார்ட்ஸ், 2022 மற்றும் 2023 ஆண்டு கோல்டன் புக் ஆப் வேர்ல்டு ரெக்கார்ட்ஸ்ல் இடம் பெற்ற சிறப்பு பெற்றவர். பள்ளியில் பல போட்டிகளில் கலந்து கொண்டு ஏராளமான பரிசுகளைப் பெற்றுள்ளார். பயிற்றுவிப்பாளர் பயிற்சி எடுத்துவருகிறார். தற்காப்புக் கலைகளை ஒவ்வொரு பெண்ணும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இவரது லட்சியம். தன் நன்றியுரையை முடித்தபின், உற்சாகத்துடன் சில கராத்தே பயிற்சியை செய்து காட்டி பலத்த கைத்தட்டலைப் பெற்றார்.

## BEST WISHES

Congrats...wish our function a grand success!

- Ramjee, Makkal Kural

It was a well organised function. It was very difficult to say that it was the second edition going by the way it was organised. Kudos to Mrs & Mr. Ramki.

The number of awardees have also trebled and each one was distinct and well deserving!!

- N . Anand



மலர்வனம் கோல அரசி விருது

ராதா கல்யாணராமன்

சிறுவயதில் இவருக்கு கோலம் போட ஊக்கிவித்தவர் இவரது தந்தை. இவரது ஊரில் தொடர்ந்து பல கோல போட்டிகளில் கலந்து கொண்டு ஏராளமான விருதுகளை பெற்றுள்ளார். தற்போது சென்னையில் வசிக்கும் இவர் கோலங்கள், ரங்கவல்லி, கோலம் என் தூரசியேஸ் போன்ற ஆன்லைன் வாட்ஸப் குரூப்களில் இணைந்து தனது கோலங்களை அவற்றில் பதிவேற்றம் செய்வது மட்டுமின்றி, தன் கோலத்திறமையை மேலும் வளர்த்து கொண்டார். மேற்கு மாம்பலத்தில் உள்ள ஸ்ரீ சிருங்கேரி சாரதாம்பாள் கோவிலில் வெள்ளிக்கிழமை அம்பாள் தங்க ரதத்தின் முன் மிக பிரம்மாண்டமான மாக்கோலம் போட்டு அசத்திவருகிறார். மயிலாப்பூர் கோலப் போட்டி, சாஸ்த்ரா பல்கலைக்கழகம், தி ஹிண்டு மற்றும் தீபம் எண்ணெய், முகி ஹோம் கேர் நடத்திய போட்டிகளில் கலந்து கொண்டு ஏராளமான பரிசுகளை பெற்றுள்ளார்.

---

## Very impressive & motivating

A very heartfelt thanks for this wonderful recognition sir. I was really felt with mixed emotions as this is my first award. I am very happy to receive this award among those super talented people. Once again thanks a ton for giving me this recognition. The program was well organized. It was surprising to see so much talents and to get to know each other. Dr. Sruthi's speech was very impressive and very much motivating.

- Dr. Nithyashree







நம் உரத்த சிந்தனை ஆசிரியர் உதயம் ராம் (கௌரவிப்பு பிரேம்குமார், கிருஷ்ணமூர்த்தி), எழுத்தாளர் என்சி மோகன்தாஸ் (கௌரவிப்பு ஆனந்த் மற்றும் மணிகண்டன்), கவிஞர் பொ.வெ. இராஜகுமார் (கௌரவிப்பு நாணா மற்றும் எம்கே நாராயணசுவாமி) வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள்.



புகழ்பெற்ற எழுத்துரு வடிவமைப்பாளர் மற்றும் புகைப்பட கலைஞர் நாணா அவர்களுக்கு கவிஞர் குமரி அமுதன் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்து, வாழ்த்துக்கவிதை ஒன்றை வாசித்தார்.

வருட சந்தா மலர்வனம் ரூ. 500/–

பாட்டும் பரதமும் ரூ.600/–

ஜிபே: 9884694708



எழுத்தாளர் வெ. தயாளன் அவர்களுக்கு மலர்வனம் சார்பாக போரூர் கிருஷ்ணகுமார் பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கி கௌரவித்தார்.



மலர்வனம் இதழ் வடிவமைப்பாளர் சுடர் டிசைன்ஸ் கிருஷ்ணகுமார் அவர்களுக்கு உதயம் ராம் பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசு வழங்கினார்.





எழுத்தாளர் மடிப்பாக்கம் வெங்கட் (கௌரவிப்பு உதயம் ராம்), கிருஷ்ண மூர்த்தி, ஏவி. முரளி மனோகர் (கௌரவிப்பு வெ. தயாளன்), சின்னத்திரை இயக்குநர் மணிபாரதி அவர்களும் மேடை ஏறி விருது பெற்றவர்களையும் மலர்வனத்தையும் வாழ்த்தினார்கள்.

சிறப்பு விருந்தினர்கள் மூவரும் மலர்வனம் விருது பெற்றவர்களை மனதார வாழ்த்தினார்கள். அவர்களுக்கு மலர்வனம் ஆசிரியர் நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்.





டாக்டர் ஷ்ருதி ப்ரஷாந்த் தன் சிறப்புரையில் பல மருத்துவ குறிப்புகளையும் எடுத்துரைத்து, தான் வாழ்வில் சந்தித்த மருத்துவ சவால்களையும் சொல்லி நெகிழவைத்தார். சிறப்பு விருந்தினர்களுக்கும் வித்யாசமாக சான்றிதழ் வழங்கியதை டாக்டர் ஷ்ருதி சுட்டிக்காட்டி மலர்வனம் ஆசிரியரை பாராட்டினார். சிறப்புரையை நிறைவு செய்யும் முன் தன் தாய் திருமதி சுகண்யா கிருஷ்ணமூர்த்தியுடன் (கௌரவிப்பு விஜி கிருஷ்ணன்) சேர்ந்து மேடையில் அம்பாள் பராசக்தி ஜனனி என்ற பாடலைப்படி அசத்தினார்.



லதா சரவணன் அவர்கள் பேசும் போது இந்த நிகழ்ச்சியில் விருது பெற்றவர்களின் சாதனைகளை கேட்கும் போது பிரமிப்பாக இருக்கிறது. ஒவ்வொருவரைப்பற்றி அழகாக, தெளிவாக அறிமுகப்படுத்தியது பாராட்டத்தக்கது. இந்த சாதனையாளர்களிடம் பேசினால் கதை எழுத நல்ல கரு கிடைக்கும் என்றார். விருது பெற்றவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அனைவரையும் மனதார வாழ்த்தினார்.




நாராயணி சங்கமித்ரன் சாதனை மகளிரை வாழ்த்தியதோடு, தங்கள் நிறுவனம் மலர்வனத்துடன் இணைந்ததில் மிக்க மகிழ்ச்சி என்றும், தொடர்ந்து மலர்வனத்துடன் இணைந்து செயல்படுவோம் என்றார். இவருக்கு நந்தினி கிருஷ்ணகுமார் மலர்வனம் சார்பாக நினைப்பரிசு வழங்கி நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

எழுத்தாளர் சரோஜா சகாதேவன் (கௌரவிப்பு டாக்டர் ஷ்ருதி ப்ரஷாந்த்), எழுத்தாளர் கணேஷ் பாலா, மணிகண்டன், பிரேம்குமார், எம். ராமதாஸ், கௌசிக் கோபாலகிருஷ்ணன், கிருஷ்ணகுமார் & நந்தினி, நிசான், அபிநயா, ஸ்ரீவித்யா, கணேஷ் & பார்வதி கணேஷ், சாருபிரபா, மீனா, ரேவதி, சாந்தி கணேசன், சித்ரா ஸ்ரீதரன், சந்திரசேகர், தீபிகா தேவி, Dr. சங்கீத கலா, வினோத், மல்லிகா, நவினா போன்ற பலர் கலந்து கொண்டார்கள்.

மலர்வனம் ஆசிரியர், நிகழ்ச்சியில் பார்வையாளர்களாக கலந்து கொண்ட பலரை மேடை ஏற்றி, மற்றவர்களை கௌரவிக்க வைத்தது பலருக்கு அதிசயமாகவும், ஆச்சரியமாகவும் இருந்தது. ஏராளமான மலர்வனம் வாசகர்களும், நண்பர்களும் கலந்து கொண்டு இந்நிகழ்வை வெற்றிகரமான விழாவாக ஆக்கினார்கள் என்றால் மிகையாகாது.





அழகாக நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய உமா பிரேம்குமாருக்கு சிறப்பு விருந்தினர்கள் பொன்னாடை அணிவித்து, நினைவுப்பரிசு வழங்கி கௌரவித்தார்கள். (பலத்த கைத்தட்டல்)



டிஎஸ். ஸ்ரீதரன் (கௌரவிப்பு ராம்கி தம்பதிகள்) மலர்வனம் ஆசிரியர் சார்பாக நன்றியுரை ஆற்ற விருது விழங்கும் விழா நிறைவுற்றது. (மேடையிலேயே மலர்வனத்திற்கு சந்தா பணத்தை ஆசிரியரிடம் இவர் வழங்க, ஒரு சிலர் சந்தா கட்ட மேடை அருகே வந்தனர்).